2013 அக்டோபர் 29]

கிளை மருத்துவமனையை அமைத்துத் தருகிறேன் என்று தெரிவித்திருக்கின்றார். அது குறித்து ஏதேனும் விவரம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமம் கால்நடைத் துறையினுடைய விதிகளுக்குட்பட்டிருக்கும் என்று சொன்னால், அங்கே ஒரு கிளை கால்நடை மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஒரு கால்நடைக் கிளை மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வரும் நிதியாண்டில் கால்நடைக் கிளை மருத்துவமனைகள் அமைக்க நிதி ஒதுக்கப்படும்போது அங்கே கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

பஞ்சாலை

***34770—திரு. இ. சுப்பையா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அம்பாசமுத்திரம் தொகுதியில் பஞ்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

திரு. இ. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மை, வாய்மை, நேர்மை இவற்றின் முழு வடிவமாகத் திகழும் எங்கள் தாய், தொண்டனுக்கு பரிபூரணத்தை நாளும் வழங்கிடும் எங்களின் அட்சயபாத்திரம், கோடானுகோடி தமிழர்களுக்கு காலம் தந்த கொடையாய் விளங்கும் எங்களின் அன்புத் தெய்வம், எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தற்போது பஞ்சாலை அமைக்க இயலாது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருப்பினும், அம்பாசமுத்திரம் தொகுதியில் 6,000 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வந்த Madura Coats என்ற தனியார் நிறுவனம், தற்போது சுமார் 1,000 தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. ஆகவே, பஞ்சாலைத் தொழிலாளர்கள் அதிகளவில் உள்ள அம்பாசமுத்திரம் தொகுதியில் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கருணைப் பார்வைக்குக் கொண்டு சென்று, அம்பாசமுத்திரம் தொகுதியில் பஞ்சாலை அமைக்க ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் நூற்பாலைகள் அதிகம் உள்ள மாநிலம் தமிழகம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக்

2013 அக்டோபர் 29]

கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவில் நூல் உற்பத்தியில் 46.78 விழுக்காடு தமிழகத்தில் உற்பத்தி செய்து, ஏற்றுமதியும் செய்யப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வந்தன. பல்வேறு காரணங்களால் கடந்த காலங்களில் 13 கூட்டுறவு நூற்பாலைகளை மூடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் இந்த அரசுக்கு 486 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு, மூடப்பட்டன. ஓடிக்கொண்டிருக்கும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளும் இதுவரை 132 கோடி ரூபாய் நட்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த நூற்பாலைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 22 ஆண்டுகளுக்குப் பின்பு, கடந்த 2012–2013 ஆம் ஆண்டில் 4 கோடியே 72 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளன என்பதையும், இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு ஒரு சாதனை என்பதையும் இங்கே எடுத்துக் கூறி (மேசையைத் தட்டும் ஒலி), வரக்கூடிய காலங்களில், . .

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: இந்த நூற்பாலைகளை நவீனப்படுத்துவதன்மூலம் நூலின் தரத்தைக் கூட்டவும், உற்பத்தியைப் பெருக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் 104.41 கோடி ரூபாயை இந்த 5 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் வழங்கியுள்ளார்கள். கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நிதி வழங்கி இலாபத்தை ஈட்டுகின்றபோது அந்தத் தொகுதியிலுள்ள மக்களின் நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களிடம் எடுத்துக்கூறி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

திரு. இ. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புண்ணியத்தின் பிறப்பு, புரட்சியின் புறப்பாடு, கருணையின் வெளிப்பாடு, துணிவின் தோற்றம், மனித சக்தியைக் கடந்த மகா

சக்தி மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்குக் கொண்டு சென்று, நலிந்த பஞ்சாலைகளைச் சரிசெய்யவும், நிதிநிலையையும் சரி செய்யவும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி எனது சார்பாகவும், அம்பாசமுத்திரம் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

பேருந்து வசதி

***22129—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூருக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து சேலத்திற்கு நாளொன்றுக்கு 26 பேருந்துகள்மூலம் 55 நடைகளும், சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு 77 பேருந்துகள்மூலம் 165 நடைகளும், குறுகிய நேர இடைவெளியில் இயக்கப்பட்டு வருகின்றன. சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூர் செல்ல போதிய பேருந்து வசதிகள் உள்ளன. சிதம்பரம் தொகுதியில் இரண்டு ஆண்டுகளில் 20 புதிய வழித்தடப் பேருந்துகளைத் தாயுள்ளத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிதம்பரத்திலிருந்து சேலம் வழியாக கோயம்புத்தூருக்கு நேரடிப் பேருந்து இயக்க